Hospice général

விடயம்: 2025 யனவரி முதல் சமூக நலன்புரிக்கான மாற்றங்கள்

அன்புடையீர்:

சமூக நலன்புரியும் வறுமைக்கு எதிரான போராட்டமும் தொடர்பான சட்டம் (LASLP) எனப்படும் ஒரு புதிய சமூக நலன்புரிச் சட்டம் 2025 யனவரியில் நடைமுறைக்கு வரும். Hospice général உடனான உமது உறவிற் சில மாற்றங்கள் காணப்படும், அவை யாவருக்கும் பயனளிக்கும்.

இச்சட்டத்தின் பிரதான நோக்கம் சமூக நலன்புரியைப் பெறுவோருக்கு அவர்களின் சமூக, தொழில் ஒருங்கிணைப்புக்கு வசதி செய்ய வழங்கப்படும் ஆதரவை வலுப்படுத்துவதாகும். இது ஜெனேவாவில் வறுமையின் சவால்களை நிறைவேற்றவும் சமூக நலன்புரிக்கான அணுகலை எளிதாக்கவும் கூட நோக்கமுடையது.

எனவே, உமது நிதிப் பயன்கள் கூட்டப்பட்டு ஒரு ஒட்டுமொத்த் தொகையால் மிகை நிரப்பப்படும். இப்ஒட்டுமொத்த் தொகைகள், நீர் முன்னர் Hospice général இற்குச் சமர்ப்பித்து வந்த விலைச் சிட்டைகளை நீரே முகாமை செய்து கொள்ள வழி செய்யும். இவ்வழியில் நீர் உமது வரவு செலவின் முகாமைத்துவத்தில் அதிக சுயாதீனமடைவீர்.

நீர் உழைக்கத் தொடங்கியதும் பகுதி நேர அடிப்படையிலாயினும் உமக்கு உமது வேலைக்குச் செல்லவோ திரும்பி வரவோ உதவுவதற்காக வருமானத்திலிருந்து கழிக்கக் கூடிய ஒரு தொகை ஒதுக்கப்படும். எனவே, நீர் வேலை செய்யும் போது உமது மாதாந்த வருமானம் அதிகரிக்கும்.

புதிய சட்டத்தில் வேறு மாற்றங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் தகவல்களுக்காக, நாம் உம்மை அழைப்பதாவது:

- பின்வரும் தொடுப்பினூடாக விளக்கக் காணொளிகளையும் ஆவணங்களையும் பார்க்கவும் வாசிக்கவும் செய்க: laslp.hospicegeneral.ch

- Hospice général ஊழியருடன் உமது குறிப்பான நிலைமையைப் பற்றிக் கலந்துரையாட ஆண்டு முடிவுக்கு முன்னர் அவரைச் சந்திக்க

இவ்வண்ணம்,

Hospice général முகாமைத்துவம்